செய்தி வெளியீட்டு எண்:758 நாள் – 27.10.2009

**<u>செய்தி வெளியீடு–27.10.2009</u>**

## தமிழக அரசுக்கு காவலர் வீட்டுவசதிக் கழகம் 50 இலட்ச ரூபாய் ஈவுத்தொகை!

## முதலமைச்சர் கலைஞர் அவர்களிடம் காவலர் வீட்டுவசதிக் கழகத் தலைவர் வழங்கினார்!

**தமிழ்நாடு காவலர் வீட்டுவசதிக் கழகம் 2008–2009ஆம் ஆண்டிற்குரிய நிகர இலாபமாக ஒரு கோடியே 99 இலட்சத்து 39 ஆயிரம் ரூபாய் ஈட்டியுள்ளது. இதில், தமிழக அரசுக்கு ஈவுத் தொகையாக 50 இலட்ச ரூபாய் வழங்கிட முடிவு செய்து, அதன்படி 50 இலட்ச ரூபாய்க்கான காசோலையை முதலமைச்சர் கலைஞர் அவர்களிடம் காவலர் வீட்டுவசதிக் கழகத்தின் தலைவர் திரு.என்.பாலச்சந்திரன், ஐ.பி.எஸ்., இன்று (27.10.2009) வழங்கினார். இந்நிகழ்வின்போது, நிதித்துறை முதன்மைச் செயலாளர் திரு.கு.ஞானதேசிகன், ஐ.ஏ.எஸ். உள்துறைச் செயலாளர் (பொறுப்பு) திரு.தேவ.ஜோதிஜெகராஜன்,ஐ.ஏ.எஸ்., காவலர் வீட்டுவசதிக் கழக நிர்வாக இயக்குநர் திரு.விபாகர்சர்மா, ஐ.பி.எஸ். ஆகியோர் உடனிருந்தனர்.**

*****

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9